**3. இஸ்ரவேல் மக்கள் பெலிஸ்தரை எக்காலத்தில் மேற்கொண்டனர்?**

1சாமுவேல் 7:13ல், "அதன்பின்னர் பெலிஸ்தர் இஸ்ரவேலின் எல்லையிலே வராதபடிக்குத் தாழ்த்தப்பட்டார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தொடர்ந்து வரும் அதிகாரங்களில் இஸ்ரவேலர் மறுபடியுமாகப் பெலிஸ்தருடன் போரிடுவதை நாம் காணலாம் (9:16, 10:5, 13:5, 13:7). இம்முரண்பாட்டுக்கான காரணம் யாது?
**(மாலதி ஜெயகுமார், லண்டன்)**

1சாமுவேல் 7:13ல் இஸ்ரவேலில் குடியிருந்த பெலிஸ்தர்கள் மறுபடியும் அவ்விடங்களில் குடியேறுவது முழுமையாகத் தடுக்கப்பட்டதைப்பற்றியே கூறுகிறது. யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தை ஆக்கிரமித்தபோது, அவர்கள் பல பிரதேசங்களைக் கைப்பற்றாமல் இருந்தனர் (யோசு.13). இவற்றில் பெலிஸ்தர் குடியிருந்த ஐந்து பட்டணங்களும் இருந்தன (யோசு.13:3). இப்பட்டணங்களில் இருந்த பெலிஸ்தர் மறுபடியும் வந்து குடியேறாதபடிக்கு இவ்விடங்களிலிருந்து துரத்தப்பட்டதைப்பற்றியே 1சாமுவேல் 7:13-14 கூறுகிறது. இதனைத் தொடர்ந்து வரும் அதிகாரங்களில் பிற்காலத்தில் இஸ்ரவேல் மக்களுக்கும் பெலிஸ்தருக்கும் இடையில் நடைபெற்ற யுத்தங்களைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, 1சாமுவேல் 7ம் அதிகாரத்தை முரண்படுத்துகிற விதத்தில் தொடர்ந்துவரும் அதிகாரங்களில் பெலிஸ்தர்களைப்பற்றி எழுதப்பட்டுள்ளது என்று கூறமுடியாது.

© M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, London, November, 2006.